[திரு. செல்லூர் கா. ராஜு] [2017 ஜூலை 13

கேட்டார். இதுபோன்ற விலையேற்ற காலங்களில், தக்காளி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கூடினாலும், அந்தப் பொருட்கள் மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 'விலை நிலைப்படுத்தும் நிதியம்' என்ற நிதியத்தை உருவாக்கினார்கள். அந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. கடந்த காலத்திலும்கூட பெரிய வெங்காயத்தின் விலை கூடியது. அப்பொழுதுகூட மாண்புமிகு அம்மா அவர்கள் 22 மெட்ரிக் டன் அளவிலான வெங்காயத்தை மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்து, இங்கே நியாய விலைக் கடைகள் மூலமாகவும், மற்ற கடைகள் மூலமாகவும் கொடுத்து, குறைவான விலைக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுபோன்ற நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசை வழிநடத்துகிற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் தலைமையில் செயல்படும் இந்த அரசானது முனைப்போடு இன்றைக்கு எடுத்திருக்கிறது. அதற்கான நடவடிக்கை துறை ரீதியாக எடுக்கப்பட்டிருக்கிறது, உறுதியாக இந்த விலையேற்றம் மக்கள் மத்தியில் பாதிப்பு இல்லாத வகையில் சரிசெய்யப்படும். அதுமட்டுமல்ல; இன்றைக்கு விவசாயிகளுக்கு பயிர்க் கடன்கள் வழங்குவதுபோல், காய்கறிகள், பழங்கள் தங்குதடையின்றி ஆண்டு முழுவதும் கிடைப்பதற்கு, அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசானது வழிவகை செய்திருக்கிறது.

முற்பகல் 11–30

எனவே, அந்த அடிப்படையில் 31–5–2014 வரை ரூபாய் 34.70 கோடி வட்டியில்லா கடனாகவும், ரூபாய் 22.42 கோடி மானியமாகவும், ஆக கூடுதலாக, ரூபாய் 56.49 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சேலம், துண்டுப் பிரசுரம் விநியோகித்த இரண்டு பெண்கள் கைது–ரிமாண்ட் செய்யாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஒரு நிமிடம் நீங்கள் உட்காருங்கள். உங்கள் quota–வை திரு. ஜெ. அன்பழகன்

2017 ஜூலை 13] [பேரவைத் தலைவர்]

அவர்களுக்குக் கொடுக்கிறேன். அவர் கேள்வி கேட்கட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. ஜெ. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சேலத்தில் துண்டுப் பிரசுரம் விநியோகித்த இரண்டு பெண்களை காவல் துறையினர் கைது செய்து,* remand *செய்யாமல் இருந்த நிலையில், சமூக ஆர்வலர் திரு. பியூஸ் மானுஷ் அவர்கள் நேற்று இரவு 11–00 மணி அளவில் நீதிபதி வீட்டின்முன் தர்ணா போராட்டம் நடத்தியிருக்கிறார். இதுவரையில் காவல் துறை அந்த இரண்டு பெண்களை* remand *செய்து இருக்கிறதா? நாட்டிலே பதற்றமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பெண்களை மாவோயிஸ்டுகள் என்று காவல் துறையினர் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற அந்த சேலம் மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை அவரின் கவனத்திற்குத் தங்கள்வாயிலாகக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குக் காலையிலேயே என்னுடைய அறைக்கு வந்து, இந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தால், அதற்கு உரிய பதிலை நான் வாங்கித் தந்திருப்பேன். நீங்கள் அதை என்னிடம் முன்பே சொல்லாததால், தாங்கள் பேசியதை மட்டும் அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.*

3. கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய ஐயத்திற்கு விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சட்டமன்றத்தில் நான் இல்லாதபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமிப்பது குறித்து சபையின் கவனத்தை ஈர்த்திருக்கிறார். கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிப்பது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருக்கிறது என்றும், அதன்படி, கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகளை இந்திய அளவிலே ஒரு தேர்வு நடத்தி, நீதிபதிகள்*